2017 ஜூன் 19]

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் தங்களின் சுப நிகழ்ச்சிகள், சமுதாய விழாக்கள், கூட்டங்கள் ஆகியவற்றை நடத்துவதற்காக, 1971 மற்றும் 1972 ஆம் ஆண்டுகளிலிருந்து சமுதாயக் கூடங்கள் படிப்படியாகக் கட்டப்பட்டு வருகின்றன. அவ்வகையில் நிதி ஒதுக்கீட்டைக் கணக்கில்கெண்டு, சமுதாயக் கூடங்கள் படிப்படியாக ஆண்டுதோறும் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, நிச்சயமாக முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பவுன்ராஜ் அவர்கள்.*

திரு. எஸ். பவுன்ராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

கால்நடைக் கிளை நிலையம்

***3211—திரு. V.T. கலைச்செல்வன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், மு. பரூர் கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எனக்கு இந்த அரிய வாய்ப்பினை வழங்கிய, மறைந்தும், மறையாமலும் தமிழக மக்களின் இதயங்களில் நீங்கா இடம் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். "மக்களால் நான், மக்களுக்காகவே நான்" என்று தமிழுக்கும், தமிழக மக்களின் உரிமைகளுக்கும் பாடுபட்டு, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கு "Vision-2023" என்ற பாதையில் மாண்புமிகு அம்மா அவர்களின் கனவினை நனவாக்க ஆட்சி செய்து கொண்டிருக்கும் மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள், விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், மு. பரூர் கிராமத்தில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்ற வினாவினைக் கேட்டிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 ஆண்டுகளில் தமிழகத்தில் 810 கிளை நிலையங்களைக் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்தியும், 200 கால்நடைக் கிளை நிலையங்கள் புதியதாக உருவாக்கப்பட்டும், 1,615 புதிய கட்டடங்கள் கட்டப்பட்டும், 1,163 பழைய கட்டடங்கள் புனரமைக்கப்பட்டும், 843 புதிய கால்நடை உதவி மருத்துவர்களை நியமனம் செய்தும், மனிதர்களுக்கு இணையாக கால்நடைகளுக்கும் மருத்துவச் சிகிச்சை கிடைத்திடவும், கிராமங்களில் கால்நடை மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தி, கால்நடைகளுக்கு நோய் நொடி இல்லாமல் விவசாயப் பெருமக்கள் சிறப்பாக வாழ்வதற்கும் வழி செய்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், மு. பரூர் கிராமத்தில் கால்நடை அலகுகள் 3,000–க்கும் அதிகமாக உள்ளதால், (அதாவது 4,224

2017 ஜூன் 19]

அலகுகள்) மு. பரூர் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் (Sub Centre) *அமைக்க உள்ள சாத்தியக்கூறுகளின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு.* V.T. *கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. **கலைச்செல்வன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறியாத வயதில் தந்தையை இழந்தும், அறியவரும் வயதில் தாயை இழந்தும், அன்புருகும் வயதில் தமையனை இழந்தும், ஊன்றுகோல் உதவியின்றி உச்சங்களைத் தொட்ட உலகத்தின் அதிசயம், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழரைக் கோடி தமிழ் இனத்தை இமையாகக் காத்து, உழைக்கரிசி விலையில்லா தந்து, உலகத்தர கல்வித் தந்து, பொன்னி நதியை மீட்டெடுத்த புரட்சித் தாயின் பொற்கால ஆட்சியை (மேசையைத் தட்டும் ஒலி) நடத்தி வருகின்ற, சோதனைகளைக் கடந்து சாதனைகளைத் தருகின்ற ஒப்பில்லா மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.*

முற்பகல் 11–20

கடலூர் மாவட்டம், விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியத்திற்குட்பட்ட, மு. பரூர் கிராமம் கால்நடைகள் மிகுந்த, பின்தங்கிய மக்கள் வசிக்கின்ற பகுதியாக இருக்கிறது. இப்பகுதியில் உள்ள வேளாண் பெருமக்களின் வேண்டுகோளை நிறைவேற்றுகின்ற வகையில் புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று கால்நடைக் கிளை நிலையத்தினை அமைத்துத் தருவேன் என்று பதிலளித்தமைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியை எனது சார்பாகவும், அப்பகுதிவாழ் மக்களின் சார்பாகவும் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் புதிய கால்நடைக் கிளை நிலையத்தினை இந்த நிதியாண்டிலேயே அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து கண்டிப்பாக ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. V.T. கலைச்செல்வன் அவர்கள்.*

திரு. V.T. கலைச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், ராஜேந்திரப்பட்டினம் கிராமம், ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கான அலகுகளும், விதிகளும் பொருந்தும் வகையில் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்து அங்கு ஒரு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பா. பாலகிருஷ்ணா ரெட்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]